# பதிவு செய்ய வரவேண்டியவர்களுக்கு அறிவிப்பு

படைக்கு ஆள்சேர்க்கும் சட்டம் 1970, பிரிவு 3 வழங்கும் அதிகாரச் சக்தியின் அடிப்படையில், 1 ஜூலை 2007 தேதிக்கும் 30 செப்டம்பர் 2007 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) பிறந்த ஒவ்வொரு சிங்கப்பூர் ஆண் குடிமகனும் ஒவ்வொரு சிங்கப்பூர் ஆண் நிரந்தரவாசியும் (இந்த அறிவிப்பில் பதிவு செய்பவர் என்றழைக்கப்படுபவர்) தேசிய சேவைக்குப் பதிவு செய்வது அவசியமென்பதை அதிகார அமைப்பு தெரிவித்துக் கொள்கிறது.

**தேசிய சேவைக்கான பதிவு**

**2.** பதிவு செய்பவர் 26 ஜூன் 2024 தேதிக்கும் 16 ஜூலை 2024 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) தேசிய சேவைக்குப் பதிவு செய்தாக வேண்டும் -

(*a*) https://www.ns.sg இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்; அல்லது

(*b*) 3 டெப்போ சாலை, சிங்கப்பூர் 109680 எனும் முகவரியில் அமைந்திருக்கும் மத்திய ஆள்பலத் தளத்திற்கு (CMPB) நேரடியாகச் சென்று பதிவு செய்யலாம்.

**மருத்துவப் பரிசோதனை**

**3.** அதிகார அமைப்பு வேறுவிதமாகத் தகவல் அளித்திருந்தாலொழிய, பதிவு செய்பவர் ஒவ்வொருவரும் -

(*a*) தேசிய சேவைக்குப் பதிவு செய்யும்போது, தனது மருத்துவப் பரிசோதனைக்கு 28 ஆகஸ்ட் 2024 தேதிக்கும் 30 செப்டம்பர் 2024 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) ஒரு தேதியைக் குறிக்கவேண்டும்; அதோடு

(*b*) குறிக்கப்பட்ட தேதியில் தனது மருத்துவப் பரிசோதனைக்காகக் காலை 8 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையில் மத்திய ஆள்பலத் தளத்திற்குச் செல்லவேண்டும்.

| | |
|---|---|
| இடம்: | மத்திய ஆள்பலத் தளம்<br>CMPB - போடியம்<br>3 டெப்போ சாலை<br>சிங்கப்பூர் 109680 |
| செயல்படும் நேரம்: | திங்கள் முதல் வெள்ளி - காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி<br>சனிக்கிழமை - காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி<br>ஞாயிற்றுக்கிழமையும் பொது விடுமுறை நாட்களும் மூடியிருக்கும் |
| விவரம் கேட்டறிய: | 1800-3676767 |
| மின்னஞ்சல்: | contact@ns.sg |
| இணையத்தளம்: | https://www.ns.sg |